# பெரம்பலூர் நகராட்சி

## 2023 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27.02. 2023 ம் தேதி திங்கட் கிழமை காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

### தலைமை : நகர் மன்ற தலைவர்

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 27.02.2023 | **பொருள் 01 :** பெரம்பலூர் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் ( பொ) அவர்களது ஜனவரி– 2023 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் பதிவு செய்யலாம். | தீர்மான எண். 306<br>அனுமதிக்கப்பட்டது |
| 27.02.2023 | **பொருள் 02 : நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**<br>பெரம்பலூர் நகராட்சி பெரம்பலூர் மாவட்ட தலைநகரில் திருச்சி – சென்னை நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இந்நகராட்சி தேர்வு நிலை பேரூராட்சியாக செயல்பட்டு வந்த நிலையில் அரசாணை எண் 277 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல்துறை, நாள் 02.07.2004ன்படி மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. அரசாணை எண் 136 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல்துறை, நாள் 15.11.2006ன்படி 2–ம் நிலை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேலாக செயல்பட்டு வருகிறது.<br>பெரம்பலூர் நகராட்சியின் மொத்த பரப்பளவு 20.59 சதுர கிலோ மீட்டராகவும், 2001–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 37631 ஆகவும், 2011–ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 49578 ஆகவும் 2021–ம் ஆண்டின் கணக்குபடி 60837 ஆக உயர்ந்துள்ளது. தினசரி நகருக்குள் வந்துசெல்லும் மக்கள் தொகை தோரயமாக 40,000. மேலும் உயர்ந்துவரும் இந்நகரின் தற்போதைய மக்கள் தொகை தோராயமாக 1,00,000–மாகவும் உள்ளது.<br>இந்நகராட்சிஅமைந்துள்ள பேருந்து நிலையம் ‘‘பி’’ கிரேடு தரவரிசையில் உள்ளது. நாள் ஒன்றுக்கு தோராயமாக 450 பேருந்துகள் இந்நகருக்குள் வந்து செல்கின்றன. புதிய பேருந்து நிலையத்தில் வெளியூர் பேருந்துகள் வந்து செல்வதற்கும், பழைய பேருந்து நிலையத்தில் உள்ளூர் நகரபேருந்துகள் மற்று சிற்றுந்து பேருந்துகள் வந்து செல்வதற்கு வசதியாக இரண்டு பேருந்து நிலையம் உள்ளது.<br>இந்நகராட்சி இம்மாவட்ட தலமையிடத்தில் அமைந்துள்ள ஒரே நகராட்சியாகும். மாவட்ட தலைநகரில் உள்ளதால் சுற்றியுள்ள 20 கிராமங்களில் உள்ள பொதுமக்களின் அன்றாட தேவைகளுக்கு பெரம்பலூர் நகரத்தை பயன்படுத்தி வருகின்றனர் இந்நகராட்சியை தரம் உயர்த்துவதால் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கான உச்சவரம்பு அதிகரிப்பதுடன் அரசு நிதி உதவி கூடுதலாக பெற வாய்ப்பு உள்ளதால் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பணிகளை சிறப்பாகவும் உடனுக்குடனும் செய்து முடிக்க இயலும். மேலும் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்படுவதால் ஏற்படும் கூடுதல் பணியாளர்களால் நகராட்சி பகுதியில் உள்ள மக்களுக்கு ஆற்றவேண்டிய பணிகளை சீறும் சிறப்புமாக செயல்படுத்த இயலும்.<br>அரசாணை எண்.113 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 30.08.2019 ல் நகராட்சிகளை தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட அளவு கோலின்படி ரூ.9.00 கோடிக்கு மேலும் ரூ.15.00 கோடிக்கு கீழும் வருவாய் உள்ள நகராட்சிகளை தேர்வு நிலை நகராட்சிகளாக வகைபடுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது பெரம்பலூர் நகராட்சியின் ஆண்டு வருவாய் 13.60 கோடி ஆகும். | தீர்மான எண். 307<br>அனுமதிக்கப்பட்டது |

இந்நகராட்சி பகுதியில் தற்போது தோராயமாக 100000 மக்கள் தொகை உள்ளனர். 2011–க்கு பிறகு சுமார் 20000 அளவில் மக்கள் தொகை உயர்ந்துள்ளது. இதனைபோன்று சொத்துவரி, காலியிட வரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களின் 2022–2023ம் ஆண்டுக்கான இந்நகராட்சியின் மொத்த வருவாய் கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

**வரி மற்றும் வரியில்லா இனங்களின் ஆண்டு வருவாய் 2022–2023ம் கேட்பு பட்டியல்**

| வ.எண் | வருவாய் இன விபரம் | வரிவிதிப்பு களின் எண்ணிக்கை | ஆண்டு வருவாய் ரூ. |
|---|---|---|---|
| 1 | சொத்துவரி | 29679 | 629.00 |
| 2 | காலியிட வரி | 3288 | 74.00 |
| 3 | தொழில்வரி | 2654 | 68.31 |
| 4 | குடிநீர் கட்டணம் | 9797 | 121.54 |
| 5 | பாதாள சாக்கடை கட்டணம் | 12020 | 127.61 |
| 6 | சேவை வரி (SUC) | 28977 | 109.87 |
| 7 | வரியில்லா இனம் | 376 | 229.93 |
| | மொத்தம் | 86791 | 1360.30 |

இந்நகராட்சியின் 2019–2020ம் ஆண்டுக்கான மொத்த வருமானம் ரூ.11,51,14,952/–ம் 2020–2021ம் ஆண்டுக்கான மொத்த வருமானம் ரூ.26,65,48,368/–ம் 2021–2022ம் ஆண்டுக்கான மொத்த வருமானம் ரூ.26,37,51,292 /–ம் கடந்த மூன்று ஆண்டுகளின் மொத்த வருமானம் ரூ. 64,54,14,612 /– ஆகும் இதில் மூன்று ஆண்டுகளின் சராசரி வருமானம் 21,51,38,204 /– (64,54,14,612 3/100 =21,51,38,204) ஆகும்.

எனவே, பெரம்பலூர் நகராட்சியில் அனைத்து அடிப்படைவசதிகளை செய்து தரவும் அவற்றை நல்ல முறையில் பராமரிக்கவும் பொதுமக்களுக்கான சேவைகளை சீரியமுறையில் செய்யவும் பெரம்பலூர் நகராட்சியை இரண்டாம் நிலை நகராட்சியிலிருந்து தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்த நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் வழியே நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை– 28 அவர்களுக்கு முன்மொழிவு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. தகுதியின் அடிப்படையில் தரம் உயர்த்த நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் வழியே நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை– 28 அவர்களுக்கு முன்மொழிவு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 389 /2023/ இ1**

---

**27.02.2023**

**பொருள் 03 :** இந்நகராட்சியில் 121 தூய்மை பணியாளர்களை 3 ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பெற்று பொது சுகாதார பணியினை தனியார் மூலம் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.407/பி3/2016 நாள். 01.08.2016–ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு இவ்வலுவலக செயல்முறைகள் கடிதம் ந.க.எண். 5113/2015/எச்1 நாள். 26.09.2016–ல் 121 பணியாளர்களை 01.11.2016 முதல் ஓராண்டு காலத்திற்கு வழங்க M/s. Green Land Engineering Works Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.917 நாள். 20.09.2016–ல் அனுமதி அளிக்கப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்பணி ஓராண்டு காலம் முடிவுற்ற நிலையில் மேற்படி நிறுவனத்தின் பணி திருப்திகரமாக இல்லை என்பதால் இரண்டாம் ஆண்டிற்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண். 441 நாள். 10.11.2017–ன்படி இவ்வலுவலக செயல்முறைகள் கடிதம் ந.க.எண். 11002/2017/எச்1 நாள். 31.10.2017மூலம் 01.11.2017

தீர்மான எண். **308** அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | முதல் 31.10.2018 வரை ஓராண்டு காலத்திற்கு M/s. Our Land Engineering Works Pvt Ltd, Chennai என்ற நிறுவனத்திற்கு அனுமதி ஆணை வழங்கப்பட்டது.<br>அதனை தொடர்ந்து நகராட்சி மன்ற தீர்மானம் எண். 127 நாள். 29.10.2018–ன் படி இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 11002/2017/எச்1 நாள்.31.10.2018–ன் மூலம் 01.11.2018 முதல் 31.10.2019 வரை ஓராண்டு காலத்திற்கு மேற்படி நிறுவனத்திற்கு அனுமதி நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டது. மேற்படி 121 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்ட 3 ஆண்டு காலம் முடிவுற்ற நிலையில் மேலும் மூன்றாண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்து தரக்கோரி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.11002/2017/எச்1 நாள்.02.07.2019 ன் படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் வழியாக நிர்வாக அனுமதி கோரி முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு ஆணையை எதிர்நோக்கியுள்ள நிலையில் துப்புரவு பணியின் அத்தியாவசியம் கருதி நகர் மன்ற தீர்மானம் எண். 195 நாள். 29.10.2019 –ன்படி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.11002/2017/எச்1 நாள். 31.10.2019 ன் மூலம் மேற்படி 121 பணியாளர்களை 01.11.2019 முதல் 30.04.2020 முடிய மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து M/s. Our Land Engineering Works Pvt Ltd, Chennai நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. நகர் மன்ற தீர்மானம் எண். 303 நாள். 27.04.2020 –ன்படி இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 11002/2017/எச்1 நாள். 28.04.2020 ன் மூலம் மேற்படி 121 பணியாளர்களை 01.05.2020 முதல் 30.10.2020 முடிய மேலும் 6 மாத காலத்திற்கு வழங்க ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து M/s. Our Land Engineering Works Pvt Ltd, Chennai நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.<br>நகர்மன்ற தீர்மானம் எண்.396 நாள். 29.10.2020–ல் அனுமதி பெறப்பட்டு இவ்வலுவலக செயல்முறைகள் கடிதம் ந.க.எண். 11002/2017/எச்1 நாள். 29.10.2020–ன்படி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை 121 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்க M/s. Our Land Engineering Works Pvt Ltd, Chennai நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.மேலும் நகர் மன்ற தீர்மானம் எண். 640 நாள். 29.10.2021 –ல் அனுமதி பெறப்பட்டு இவ்வலுவலக செயல்முறைகள் கடிதம் ந.க.எண். 11002/2017/எச்1 நாள். 01.11.2021–ன்படி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை 121 பணியாளர்களை 01.11.2021 முதல் 30.06.2022 வரை முடிவடைந்த காலத்திற்கு ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து M/s. Our Land Engineering Works Pvt Ltd, Chennai நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. தூய்மைப்பணியாளர்களை வெளிக்கொணர்வுமூலம் ஒப்பந்த அடிப்படையில் பெறுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கிட கோரி முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஆணையினை எதிர்நோக்கும் நிலையில் பொது மக்களின் நலன் மற்றும் பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணியினை தொடர்ந்து திறம்பட செயல்படுத்துவதற்கும் இந்நகராட்சியின் தற்போதைய இடைக்கால கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 60000 க்கு மேல் உள்ளதாலும் இந்நகராட்சி நாளுக்கு நாள் அதிகளவில் முன்னேற்றம் அடைந்து வருவதை தொடர்ந்து மக்கள் வந்து செல்வது அதிகளவில் உள்ளதால் இந்நகரில் அதிகளவில் குப்பைகள் சேகரமாகுவதாலும் அக்குப்பைகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என தரம் பிரித்து உரம் தயாரிப்பதற்கு தீவிர பணி நடைபெற்று வருவதால் இப்பணிக்கு தற்போதுள்ள பணியாளர்களை கொண்டு (நிரந்தர பணியாளர்கள் 30 நபர்களும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் 110 நபர்கள்) பணிபுரிய இயலாது எனவும் மேற்படி 121 பணியாளர்களைவும் கொண்டே பணிபுரிந்தால் மட்டுமே துப்புரவு பணி முழுமை பெறும் எனவும், மேலும் பணியாளர்கள் தேவை அவசியமாகிறது என்பதால் பொது மக்கள் மற்றும் பொது சுகாதாரம் நலன் கருதி இந்நகர் மன்ற தீர்மான எண். 91 நாள். 29.07.2022 ன்படி 01.07.2022 முதல் 30.09.2022 முடிவடைந்துள்ளது. அதனை தொடர்ந்து நகர்மன்ற தீர்மான எண். 196 28.09.2022ன்படி மேற்படி 121 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிவதற்கு ஏற்கனவே ஒப்பந்தம் கொடுத்துள்ள நிறுவனத்திற்கு அதே விலை விகிதத்தில் நீட்டிப்பு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளவாறு இவ்வலுவலக செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.11002/2017/எச்1 நாள்.28.09.2022 ன்படி 01.10.2022 முதல் 31.12.2022 முடிய மேலும் 3 மாதங்களுக்கு அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி 121 பணியாளர்களை வழங்குவதற்கு அனுமதி காலம் 31.12.2022 ல் முடிவடைகிறது. | |

| | | |
|---|---|---|
| | எனவே இந்நகராட்சிக்கு 121 பணியாளர்களை ஏற்கனவே வழங்கப்பட்ட அதே விலை விகிதத்தில் மேலும் 3 மாதங்களுக்கு வழங்க சம்மதம் இருப்பின் அதனை எழுத்து மூலமாக தெரிவிக்குமாறு இவ்வலுவலக ந.க.எண். 11002/2017/எச்1 நாள். 22.12.2022ம் தேதிய அறிவிப்பின்படி தற்போதைய ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதனை தொடர்ந்து M/s. Our Land Engineering Works Pvt Ltd, Chennai என்ற நிறுவனம் 23.12.2022 –ம் தேதிய கடிதத்தில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட செயல்முறை உத்திரவில் கண்டுள்ள நிபந்தனைகளின்படி அதே விலை விகிதத்தில் 121 பணியாளர்களை 01.01.2023 முதல் 31.03.2023 வரை 3 மாத காலத்திற்கு வழங்கிட சம்மதம் தெரிவித்துள்ளனர். இப்பணியின் அத்தியாவசியம் கருதி மேலும் 3 மாத கலத்திற்கு 01.01.2023 முதல் 31.03.2023 வரை 121 பணியாளர்களை M/s.Our Land Engineering Works Pvt Ltd, Chennai நிறுவனத்தின் மூலம் பெற்று தங்குதடையின்றி பொது சுகாதாரபணி மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு : -</u>**<br>இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் வெளிக்கொணர்வு மூலம் தூய்மைப்பணியாளர்களை பெற்று பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் உத்திரவிற்கிணங்க முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் இப்பணிக்கான நிர்வாக அனுமதி பெறுவதற்கு தேவையான கால அவகாசம் தேவைப்படுவதாலும், தற்போதைய ஒப்பந்ததாரர் மூலம் 121 பணியாளர்களை பெற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.<br>இந்நகராட்சியில் வழக்கமான துப்புரவு பணிகள் தங்குதடையின்றி மேற்கொள்ளவும் இந்நகரின் பொது சுகாதார பணியின்அவசியத்தை கருதியும், 121 பணியாளர்களின் பணி அவசியமாக உள்ளதாலும் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியாளர்களை நியமனம் செய்திடும் வரை மேலும் 3 மாத காலத்திற்கு ஏற்கனவே அளிக்கப்பட்ட விலை விகிதம் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு 121 பணியாளர்களை வழங்கிட சம்மதம் தெரிவித்துள்ளதன் அடிப்படையிலும் 01.01.2023 முதல் 31.03.2023 வரை பணியாளர்களை வழங்கிட தற்போதைய நிறுவனமான M/s. Our Land Engineering Works Pvt Ltd, Chennai என்ற நிறுவனத்திற்கு அனுமதி வழங்கவும், மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள உண்டான உத்தேச செலவினம் ரூ.50,00,000/–ஐ அதற்காக வறையறுக்கப்பட்ட நிதி அல்லது வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 11002/எச்1/2017** | |
| **27.02.2023** | **பொருள் 04 :** இந்நகராட்சியில் 110 தூய்மை பணியாளர்களை 3 ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பெற்று பொது சுகாதார பணியினை தனியார் மூலம் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண். 407/பி3/2016 நாள். 02.02.2016–ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு இவ்வலுவலக செயல்முறைகள் கடிதம் ந.க.எண். 5113/2015/எச்1 நாள். 22.08.2016–ல் 110 பணியாளர்களை 01.09.2016 முதல் ஓராண்டு காலத்திற்கு M/s. Green Land Engineering Works Pvt Ltd என்ற நிறுவனத்தின் மூலம் வழங்குவதற்கு நகர்மன்ற தீர்மானம் எண். 838 நாள். 05.08.2016–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்பணி ஓராண்டு காலம் முடிவுற்ற நிலையில் மேற்படி நிறுவனத்தின் பணி திருப்திகரமாக இல்லை என்பதால் இரண்டாம் ஆண்டிற்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகர்மன்ற ஒப்புதல் பெற்று இவ்வலுவலக செயல்முறைகள் கடிதம் ந.க.எண். 8934/2017/எச்1 நாள். 06.09.2017–ன்படி 07.09.2017 முதல் 06.09.2018 வரை ஓராண்டு காலத்திற்கு M/s. Our Land Engineering Works Pvt Ltd, Chennai என்ற நிறுவனத்திற்கு அனுமதி ஆணை வழங்கப்பட்டது. | தீர்மான எண். **309** அனுமதிக்கப்பட்டது |

அதனை தொடர்ந்து நகராட்சி மன்ற தீர்மானம் எண். 105 நாள். 20.08.2018–ல் அனுமதி பெறப்பட்டு இவ்வலுவலக செயல்முறைகள் கடிதம் ந.க.எண். 8934/2017/எச்1 நாள். 06.09.2018-‹படி 07.09.2018 முதல் 06.09.2019 வரை ஓராண்டு காலத்திற்கு மேற்படி நிறுவனத்திற்கு அனுமதி நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது. மேற்படி 110 பணியளார்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்ட 3 ஆண்டுகாலம் முடிவுற்ற நிலையில் துப்புரவு பணியின் அத்தியாவசியத்தினை கருதி நகர் மன்ற தீர்மானம் எண். 160 நாள். 30.09.2019 –ல் அனுமதி பெற்று இவ்வலுவலக செயல்முறைகள் கடிதம் ந.க.எண். 8934/2017/எச்1 நாள். 05.09.2019–ன்படி மேற்படி 110 பணியாளர்களை 07.09.2019 முதல் 06.03.2020 வரை 6 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யப்பட்டது, நகர் மன்ற தீர்மானம் எண். **291** நாள். 28.02.2020 –ல் 07.03.2020 முதல் **6** மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யப்பட்டது. மேலும் இவ்வலுவலக செயல்முறைகள் கடிதம் ந.க.எண். 8934/2017/எச்1 நாள். 03.03.2020–ன்படி 05.09.2020 வரை **6** மாத காலத்திற்கும் அனுமதி நீட்டித்து வழங்கப்பட்டுள்ளது. நகர் மன்ற தீர்மானம் எண். **372** நாள். 31.08.2020 –ல் அனுமதி பெறப்பட்டு இவ்வலுவலக செயல்முறைகள் கடிதம் ந.க.எண். 8934/2017/எச்1 நாள். 02.09.2020–ன்படி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை 110 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்க M/s. Our Land Engineering Works Pvt Ltd, Chennai நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதி காலம் 06.09.2021ல் ஓராண்டு முடிவடைந்ததை தொடர்ந்து இந்நகராட்சி மன்ற தீர்மானம் எண்.723 நாள். 25.01.2022 –ன்படி 110 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்க M/s. Our Land Engineering Works Pvt Ltd, Chennai நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு 30.06.2022–ல் அனுமதி காலம் முடிவடைந்தது. இந்நகர்மன்ற தீர்மான எண். 90, நாள். 29.07.2022 ன் படி 01.07.2022 ன் முதல் 30.09.2022 முடிய மேலும் **3** மாத காலம் நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறுவதற்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்த பணியாளர்களை நியமனம் செய்யும் வரை அல்லது31.03.2023 வரை ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்திடம் அதே தினக்கூலி விகிதத்தில் பணி மேற்கொள்ள சம்மதம் பெற்று இந்நகரின் பொது சுகாதார பணியினை தங்கு தடையின்றி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பொதுசுகாதார பணிக்கு வெளிக்கொணர்வு மூலம் புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணியாளர்கள் பெறப்படும் வரை 01.01.2023 முதல் 31.03.2023 வரையிலான காலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் விலை விகிதத்திற்குட்பட்டும் 110 பணியாளர்களை வழங்க சம்மதம் இருப்பின் அதனை எழுத்து மூலமாக தெரிவிக்குமாறு இவ்வலுவலக ந.க.எண். 8934/2021/எச்1 நாள். 22.12.2022 தேதிய அறிவிப்பின் மூலம் தற்போதைய ஒப்பந்ததாரரான M/s. Our Land Engineering Works Pvt Ltd, Chennai என்ற நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டது. மேற்படி நிறுவனம் 23.12.2022 –ம் தேதிய தனது கடிதத்தில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட செயல்முறை உத்திரவில் அளித்த விலை விகிதம் மற்றும் அதில் காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு 110 பணியாளர்களை 01.012023 முதல் 31.03.2023 வரையிலான காலத்திற்கு வழங்கிட சம்மதம் தெரிவித்துள்ளனர். பொது சுகாதார பணிகள் பாதிக்காமல் தங்கு தடையின்றி மேற்கொள்வதற்கு பொது சுகாதார பணியின் அத்தியாவசியம் கருதி ஏற்கனவே உள்ள விலை விகிதம் மற்றும் நிபந்தனைகளின்படி 110 பணியாளர்களை 01.01.2023 முதல் 31.03.2023 வரையிலான காலத்திற்கு M/s. Our Land Engineering Works Pvt Ltd, Chennai என்ற நிறுவனத்தின் மூலம் பெற்று தங்குதடையின்றி பொது சுகாதாரப்பணி மேற்கொள்ளவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 50,00,000/- க்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு : -</u>**<br>இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் வெளிக்கொணர்வு மூலம் தூய்மைப்பணியாளர்களை பெற்று பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் உத்திரவிற்கிணங்க முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் இப்பணிக்கான நிர்வாக அனுமதி பெறுவதற்கு தேவையான கால அவகாசம் தேவைப்படுவதாலும், தற்போதைய ஒப்பந்ததாரர் மூலம் 110 பணியாளர்களை பெற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.<br>இந்நகராட்சியில் வழக்கமான துப்புரவு பணிகள் தங்குதடையின்றி மேற்கொள்ளவும் இந்நகரின் பொது சுகாதார பணியின்அவசியத்தை கருதியும், 110 பணியாளர்களின் பணி அவசியமாக உள்ளதாலும் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியாளர்களை நியமனம் செய்திடும் வரை மேலும் 3 மாத காலத்திற்கு ஏற்கனவே அளிக்கப்பட்ட விலை விகிதம் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு 110 பணியாளர்களை வழங்கிட சம்மதம் தெரிவித்துள்ளதன் அடிப்படையிலும் 01.01.2023 முதல் 31.03.2023 வரை பணியாளர்களை வழங்கிட தற்போதைய நிறுவனமான M/s. Our Land Engineering Works Pvt Ltd, Chennai என்ற நிறுவனத்திற்கு அனுமதி வழங்கவும், மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள உண்டான உத்தேச செலவினம் ரூ.50,00,000/—ஐ அதற்காக வறையறுக்கப்பட்ட நிதி அல்லது வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 8934/எச்1/2017** | |
| **27.02.2023** | **பொருள் 05 :** பெரம்பலூர் நகராட்சியின் தினசரி சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் 2022—2023 முதல் 2024—2025 ம் ஆண்டுவரையில் குத்தகைக்கு விடப்பட்டது. குத்தகைதாரர் தனக்கு நஷ்டம் ஏற்படுவதால் (2022—2023 ) 01.04.2022 முதல் 31.03.2023 வரையில் குத்தகை நடத்திக் கொண்டு மீதம் உள்ள இரண்டு ஆண்டுகள் குத்தகை தன்னால் நடத்த இயலாது என தெரிவித்து மேற்படி 01.04.2023 முதல் குத்தகையை நகராட்சியில் ஒப்படைக்க அனுமதி கோரியுள்ளார். தினசரி சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் 2023—2024 முதல் 2024—2025 வரையில் பொது ஏலம் விட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், விளம்பரம் செய்ய அதற்கான உத்தேச செலவினம் ரூ.40000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>1. மன்றம்அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொதுஏலம் விட நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 292/2022/அ 2** | தீர்மான எண்.<br>310<br>அனுமதிக்கப்பட்டது |
| **27.02.2023** | **பொருள் 06 :** பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 21 வரை பாதாள சாக்கடை திட்டம் தொடங்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் மூலம் கழிவு நீரை 7 எண்ணிக்கையிலான கழிவு நீரேற்று நிலையங்கள் வழியே துறைமங்கலம் பகுதியில் அமைக்கப்பட்ட கழிவுநீருந்து நிலையத்தில் சுத்திகரிப்பு செய்து கழிவு நீர் வெளியேற்றப்படுகிறது. மேற்படி கழிவுநீருந்து நிலையத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் 35 HP மோட்டார் பழுது ஏற்பட்ட காரணத்தினால் கழிவு நீர் சீரான முறையில் செல்ல இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனை தவிர்க்கும் பொருட்டு பழுதடைந்த 35 HP மின்மோட்டரை பழுது நீக்கம் செய்யவேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூரில் விலைப்புள்ளி கடந்த 03.11.2022 ல் கோரப்பட்டு ஒப்பந்ததாரர் எஸ்.ஜெயந்தி என்பவர் பணிகள் செய்ய உத்திரவு நாள் 03.11.2022 ல் வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டு பட்டியல் தொகையினை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ரூ.2,18,730 /— ஐ வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | தீர்மான எண்.<br>311<br>அனுமதிக்கப்பட்டது |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் பட்டியல் தொகையினை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 7394 /2022/ இ1

---

27.02.2023

**பொருள் 07 :** பெரம்பலூர் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் நெடுவாசல் பகுதியில் அமைந்துள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், ஆடு அடிக்கும் தொட்டி மற்றும் எரிவாயு தகன மேடை ஆகியவற்றை புதுப்பித்துக்கொள்ள சுற்று சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் அரியலூர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதத்தில் 2022– 2023 மற்றும் 2023–2024ம் ஆண்டிற்கு புதுப்பித்து கொள்ளவும், அதற்குன்டான கட்டணங்கள் செலுத்த கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருள் | கடித எண் | 2022–2023 | 2023–2024 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஆடு அடிக்கும் தொட்டி | F.ARY0213/RS/DEE/ TNPCB/ ARY/ 2023 நாள் 31.01.2023 | 10,000/– | 10,000/– | 20,000/– |
| | நெடுவாசல் சுத்திகரிப்பு நிலையம் | F.ARY0326/RS/DEE/ TNPCB/ ARY/ 2023 நாள் 31.01.2023 | – | 43,600/– | 43,600/– |
| | எரிவாயு தகன மேடை | F.ARY0316/RS/DEE/ TNPCB/ ARY/ 2023 நாள் 31.01.2023 | 5,100/– | 5,100/– | 10,200/– |
| | மொத்தம் | | 15,100/– | 58,700/– | 73,800/– |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையம் , ஆடு அடிக்கும் தொட்டி மற்றும் எரிவாயு தகன மேடை ஆகியவற்றை 2022–2023 மற்றும் 2023–2024ம் ஆண்டிற்கு புதுப்பிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 795 /2023/ இ1**

தீர்மான எண். 312 அனுமதிக்கப்பட்டது

---

27.02.2023

**பொருள் 08 :** பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 11.01.2023 மன்று மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டத்தில் இந்நகராட்சி சார்பாக அரசுத்துறைகள் ஒருங்கிணைத்து அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் 13.01.2023 முதல் 22.01.2023 வரை நடைபெறும் கண்காட்சி அரங்கினை தினந்தோறும் காலையும் மாலையும் சுத்தம் செய்ய ஏதுவாக சுழற்சி முறையில் தூய்மை பணியாளர்களை பணியமர்த்துவதற்கும் கண்காட்சி யினை பார்வையிட மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் வரவிருப்பதால் அவர்களுக்கு குடிநீர் வசதியும் தற்காலிக கழிப்பறை வசதிகளை ஏற்படுத்துவதற்கும் பணியினை தொய்வில்லாமல் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் குடியரசு தினவிழா 26.01.2023 அன்று சிறப்பாக கொண்டாடும் பொருட்டு விளையாட்டு மைதானத்தை தூய்மையாக வைத்திருப்பதற்கும், மைதானத்திற்கு செல்லும் சாலையினை தூய்மையாக வைத்திருப்பதற்கும் கலை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் மாணவ மாணவியருக்கு குடிநீர் வசதிகள் ஏற்படுத்தி தருவதற்கும், தற்காலிக கழிப்பறை வசதிகளை ஏற்படுத்துவதற்கும், விழாவில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் முக கவசம்அளித்தல் மற்றும் கைகளை சுத்தம் செய்ய சானிடைசர் வழங்க தெரிவிக்கப்பட்டது

தீர்மான எண். 313 அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க , புகைப்படக்காட்சி மற்றும் குடியரசு தின விழாவினை முன்னிட்டு மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளுவதற்கும், மற்றும் இதர பணிகளையும் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு **(ரூபாய் மூன்று இலட்சம் மட்டும் )** மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>1. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்துமேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 389 /2023/ இ1** | |
| 27.02.2023 | **பொருள் 09 :** இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி திட்டத்தின்கீழ் மாதாந்திர ஊதியத்தில் ஒவ்வொரு பணியாளர்களுக்கும், ஒவ்வொரு மாதமும், மாதாந்திர ஊதியத்தில் சந்தா தொகை பிடித்தம் செய்து அரசு தலைப்பில் செலுத்தப்படுகிறது. இப்பணியாளர்கள் பணி ஒய்வு பெற்றபின்னர் அவர்களால் செலுத்தப்பட்ட மாதாந்திர சந்தா தொகை மற்றும் அதற்கான வட்டித்தொகையினை கணக்கிட்டு கருவூலகத்தில் பட்டியல் சமர்ப்பித்து தொகை பெற்று வழங்கப்படுகிறது. அரசாணை எண். 111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ME3(2)) நாள். 13.08.2007-ன் படி சிறப்பு சேமநலநிதிதிட்டத்தின்கீழ் சந்தா தொகை செலுத்தும் பணியாளர்களுக்கு பணியிலிருந்து ஒய்வு பெற்ற பின்னர் சிறப்பு சேமநலநிதி திட்டத்திற்கான நகராட்சியின் பங்குதொகையாக பணியாளர் ஒருவருக்கு ரூ.10,000/. மட்டும் வழங்கிட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியில் பணிபுரிந்து பணிஒய்வுபெற்ற பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி திட்டத்திற்காக நகராட்சி பங்கு தொகையாக ரூ. 80,000/. வழங்கப்பட வேண்டியுள்ளது. இத்தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** அரசாணை எண். 111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ME3(2)) நாள். 13.08.2007-ன் படி சிறப்பு சேமநலநிதி திட்டத்தின்கீழ் நகராட்சி பங்கு தொகையினை பணிஒய்வு பெற்ற பணியாளர்களுக்கு வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 2991/2022 /H1** | தீர்மான எண். 314 அனுமதிக்கப்பட்டது |
| 27.02.2023 | **பொருள் 10 :** அரசாணை (நிலை ) எண் 174 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( நநி 5 (1) துறை நாள் 14.12.2022தேதி வரப்பெற்ற அரசாணையில் மாநகராட்சி /நகராட்சி பொறுப்பில் உள்ள பாழடைந்த கட்டடங்களை இடிப்பதற்கு வழிகாட்டு நெறிமுறைகள் தயார் செய்து வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 796 /2023/ இ1** | தீர்மான எண். 315 அனுமதிக்கப்பட்டது |
| 27.02.2023 | **பொருள் 11 :** பெரம்பலூர் நகராட்சியின் 2023 – 2024ம் நிதியண்டின் உத்தேச வரவு செலவு கணக்குகள் மற்றும் 2022–2023ம் நிதியாண்டின் திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவு கணக்குகள் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 8889 /2022/ பி1** | தீர்மான எண். 316 அனுமதிக்கப்பட்டது |
| 27.02.2023 | **பொருள் 12 :** பெரம்பலூர் நகராட்சி அலுவலகத்தில் இணையதள கேபிள்கள் மற்றும் இணையதள தொலைபேசி இணைப்பு பழுது ஏற்பட்டுள்ள நிலையில் அடிக்கடி பழுது ஏற்படுவதால் தினசரி வசூல் பணி பாதிக்கப்படுவதால் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 35000/– க்கு (ரூபாய்.முப்பத்தி ஐந்தாயிரம் மட்டும் ) மன்ற அனுமதி | தீர்மான எண். 317 அனுமதி |

| | | |
|---|---|---|
| | வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணியினை அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 0024 /2023/ இ1** | க்கப்பட்டது |
| **27.02.2023** | **பொருள் 13 :** பெரம்பலூர் நகராட்சியில் உள்ள ராஜா டீ ஸ்டால் முதல் ராஜா முகமது ஆஸ்பிட்டல் வரை, மரகதம் ஸ்கூல் முதல் ஆத்தூர் ரோடு வரை, சித்தர் கோவில் கிணற்றிலிருந்து புதிய பேருந்து நிலையத்தில் உள்ள அரியலூர் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள நான்கு பொது கழிப்பிடத்திற்கு பைப் லைன் அமைத்தல் அரியலூர் சாலையின் தென்புறம் உள்ள EB ஆபிஸ் முதல் EB ஆபிஸ் குடோன் வரை காவேரி குடிநீர் பைப் லைன் அமைத்தல் மற்றும் ஏ,ஆர், ஆர் ரெசிடென்சி முதல் அஜந்தா ஸ்டீல் கம்பெனி வரை உள்ள இடங்களில் குடிநீர் குழாய் இணைப்பு பணிகள் செய்ய உத்தேச செலவினம் ரூ. 4.80 இலட்சத்திற்கு (ரூபாய்.நான்கு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும் ) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 1342 /2023/ இ1** | தீர்மான எண். **318** அனுமதிக்கப்பட்டது |
| **27.02.2023** | **பொருள் 14 :** பெரம்பமலூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அறிவு சார் மையம் கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணியில் அமைக்கப்பட்டுள்ள basement – Filling level ஆனது சாலை மட்டத்தினை சமன் செய்யும் சூழலில் மிகவும் தாழ்வாக பள்ளமாக இருப்பதினால் அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளகட்டடத்தினை சுற்றிலும் Gravel Filling பணியினை மேற்கொள்ளவும் , Oramental Design பணிகள் , கட்டிடத்தின் நுழைவாயில் வரை மேற்கொள்ளுவதற்கும் மற்றும் இதர பணிகள் செய்யும் பணிக்கு ரூ. 4.50/- இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகைக்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 5195 /2021/ இ1 | தீர்மான எண். **319** அனுமதிக்கப்பட்டது |
| **27.02.2023** | **பொருள் 15 :** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய பேருந்து நிலைய மேல் தளத்தில் 20 அடி அகலம் 7அடி நீளம் அளவு கொண்ட 10 எண்ணிக்கையிலான விளம்பர பலகை அமைத்திட மீடியா மார்கெட் நிறுவனம் திருச்சி , என்ற நிறுவனம் விண்ணப்பித்துள்ளார். மேற்படி நிறுவனத்திற்கு இறுதி ஒப்புதல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வழங்கிய பிறகு மேல் நடவடிக்கை தொடரவும், புதிய பேருந்து நிலைய மேல்தளத்தில் விளம்பர பலகை அமைத்திடவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 8405 /2023/ எப்1 | தீர்மான எண். **320** அனுமதி மறுக்கப்பட்டது |

**//ஒம்//திருமதி.மா.அம்பிகா**
**நகர்மன்றதலைவர்**
**பெரம்பலூர் நகராட்சி**

**// உண்மை நகல்//**

**ஆணையாளர் (பொ)**
**பெரம்பலூர் நகராட்சி**